(ஆ) வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1991.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழக (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ. டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு திருத்த சட்ட முன்வடிவு, 1991.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1991 ஆம் ஆண்டு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகம் என்ற அந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு தவறான நோக்கத்தோடு . . . . . (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவ்வளவு தான்; ஏன் அதற்கு மேலே போகிறீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க. கட்சியினுடைய தலைவர் மாண்புமிகு திரு. இராதா அவர்கள் இங்கே சொல்லும்போது, எம்.ஜி.ஆர். பல்கலைக் கழகத்தினுடைய பெயரை மாற்ற வேண்டும் என்பதற்காக இந்தத் திருத்தம் வருவதாகச் சொல்கிறார். பத்திரிகையிலே வரும்போது, ஏதோ குறுகிய நோக்கத்தோடு, பெயர்களை